අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/04/60/07/44/බඳවා ගැනීම 2018/2019(II)-01

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2023.05.

....................................................................
....................................................................
....................................................................
....................................................................

**இலக்கம் 1885/31 மற்றும் 22.10.2014 ஆம் திகதிய புதிய அதிபர் சேவை பிரமாணக்குறிப்பின் பிரகாரம் 2018/2019 மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களுள் இலங்கை அதிபர் சேவை - தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - இரண்டாம் கட்டம் (2023)**

இலங்கை அதிபர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பான உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இலக்கம் SC 93/2021(F/R), SC 40/2022(F/R), SC 26/2022(F/R), SC 476/2019(F/R) எனும் வழக்கு நடவடிக்கைகள் சமரசமாக தீர்த்துக் கொள்ளவது தொடர்பான 12.12.2022 திகதிய சமரச வழக்குத் தீர்ப்பின்படி இலங்கை அதிபர் சேவையின் சேவை பிரமாணக்குறிப்பு பிரகாரம் இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்விற்கு தங்களுக்கு அழைப்புவிடுக்கப்படுகிறது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றேன்.

02. அதன்படி, குறித்த நேர்முகத் தேர்விற்கு கீழ்க்காணும் உரிய திகதி மற்றும் நேரத்தில் பத்தரமுல்ல, இசுருபாய, கல்வி அமைச்சின் 4 ஆம் மாடியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்திற்கு வருகைதருமாறு தயவுடன் அறியத்தருகின்றேன். (இதற்குரிய பெயர்ப்பட்டியல் 08.05.2023 ஆம் திகதியில் www.moe.gov.lk எனும் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.)

திகதி :

நேரம் :

நேர்முகத் தேர்வுச் சபை இலக்கம் :

நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு இலக்கம் :

03. அன்றைய தினம், பின்வரும் கல்வித் தகைமைகள் மற்றும் சேவை அனுபவம் தொடர்பான ஆவணங்களின் மூல பிரதிகள் மற்றும் அவற்றினது வலயக் கல்விப் பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படப்பிரதிகளை இரண்டு தனித்தனிக் கோப்புகளில் எடுத்துவருமாறு மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன். புகைப்பட பிரதிகளின் கோப்பு நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படும் திகதிக்குரிய கோப்பு நிறத்தில் இருக்க வேண்டும்.

(இலக்கம் I முதல் VI வரையான ஆவணங்களை **மட்டும்** அனைவரும் கட்டாயமாக கொண்டு வர வேண்டும் என்பதோடு, இலக்கம் VII முதல் XI வரை உள்ள ஆவணங்களுள் **01.06.2018** அன்று பூர்த்தி செய்துள்ள கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளுள் தங்களுக்குப் பொருத்தமான தகைமைகளுக்குரிய சான்றிதழ்களை மட்டும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

I. தேசிய அடையாள அட்டை
II. பிறப்புச் சான்றிதழின் நகல் (பெயரில் மாற்றம் இருப்பின் சத்தியக்கடதாசி)
III. சேவைச் சான்றிதழ் (தற்போது பணி புரியும் சேவை நிலையத்திலிருந்து பெறப்படல் வேண்டும்.)
IV. இலங்கை ஆசிரியர் சேவையின் ஆரம்ப நியமனக் கடிதம்
V. ஆசிரியர் சேவையில் உறுதி செய்யப்பட்ட கடிதம்
VI. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட வலய கல்வி பணிப்பாளரின் அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 01 இன் மாதிரிப் படிவத்திற்கு அமைய சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (குறித்த அறிக்கையில் தங்களது தகவல்கள் மற்றும் தங்களது தகைமைகளுக்குரிய தகவல்கள் சரியாகவும் அறிவுறுத்தல்களுக்கமையவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்)
VII. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கலைக்கழகத்தினால் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தினால் வழங்கப்பட்ட கல்விமாணிப் பட்டச்சான்றிதழ்

VIII .பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு துறைக்குமான பட்டச் சான்றிதழ்

IX. பட்டடப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ்

X. ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ்

XI. தேசிய போதனாவியல் டிப்ளோமாச் சான்றிதழ்

04. மேலே 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களும் நேர்முகத் தேர்வின் போதே சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதோடு, பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

05. பொது நேர்முகத் தேர்வின் போது அடிப்படைத் தகுதிகளை பூர்த்தி செய்யும் அலுவலர்கள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்விற்கு பரிந்துரைக்கப்படுவார்கள் என்பதோடு, கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் போது அதிபரது வகிபாகம் தொடர்பான தலைப்பின் கீழான தலைப்பு ஒன்றின் கீழ் வாய்மொழி மூலம் முன்வைப்பொன்றை முன்வைத்தல் வேண்டும். அந்த முன்வைப்புக்காக வழங்கப்படும் அதிகபட்ச நேரம் 05 நிமிடங்கள் ஆகும். இதற்கென தேவைப்பட்டால் உசாத்துணை நூல்களை கொண்டு வரக்கூடிய வாய்ப்பு உள்ளது. முன் ஏற்பாடு செய்யப்பட்ட திட்டத்தின்படி குறித்த வாய்மொழி மூல முன்வைப்பை மேற்கொள்ள முடியும். உங்கள் முன்வைப்புக்காக பலகை (White board & White board markers) மட்டுமே உதவிக்காக வழங்கப்படும் என்பதோடு, அந்த முன்வைப்புக்கு புள்ளிகளை வழங்கும் போது பின்வரும் அளவுகோல்கள் கருத்திற் கொள்ளப்படும் என்பதை மேலும் குறிப்பிட விரும்புகின்றேன்.

I. அறிமுகம் - (04 புள்ளிகள்)

II. முன்வைப்புத் திட்டம் - (04 புள்ளிகள்)

III. முன்வைப்புத் திறன் - (08 புள்ளிகள்)

IV. விடய அறிவு - (05 புள்ளிகள்)

V. நேர முகாமைத்துவம் - (04 புள்ளிகள்)

06. நேர்முகத் தேர்விற்கு கலந்துகொள்வதற்காக பயணச் செலவுகளோ அல்லது வேறு எந்தக் கொடுப்பனவுகளோ செலுத்தப்படமாட்டாது.

07. இந் நேர்முகத் தேர்வில் தோற்றுதல் மட்டும் இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கு நியமனம் பெறுவதற்கு உரித்துடையதாக கொள்ளப்படமாட்டாது என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்.என்.ரணசிங்க
செயலாளர்
கல்வி அமைச்சு

குறிப்பு:

1. தாங்கள் குறித்த திகதி மற்றும் குறித்த நேரத்தில் நேர்முகத் தேர்வில் கலந்துகொள்வது கட்டாயமாகும். கல்வி மற்றும் சேவை அனுபவத்தை நிரூபிப்பதற்கான ஆவணங்களின் மூல பிரதிகள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரால் உறுதி செய்யப்பட்ட அவ் ஆவணங்களின் புகைப்பட பிரதிகள் மேலே உள்ள இலக்கம் 03 இல் தொடரிலக்கம் I முதல் XI வரை குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கில் கோவைப்படுத்தி அக்கோப்பின் முகப்பில் தங்களது பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், அழைப்பு இலக்கம் மற்றும் பரீட்சைச் சுட்டெண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எடுத்து வருவது கட்டாயமானது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.
2. நேர்முகத் தேர்வின் பின்னர் எக்காரணம் கொண்டும் தகுதிச் சான்றுக்காக மேற்கண்ட ஆவணங்கள் எதையும் சமர்ப்பிக்க முடியாது என்பதை வலியுறுத்துகிறேன்.
3. நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படும் அலுவலர்களின் பெயர்ப் பட்டியல் உள்ளடக்கப்பட்ட உப ஆவணத்துக்கு அமைய குறித்த திகதிகளில் பங்கேற்கும் அலுவலர்கள் உரிய ஆவணங்களின் புகைப்பட பிரதிகள் அடங்கிய கோப்பானது குறித்த திகதிக்குரிய நிறக்கோப்பில் கொண்டு வர வேண்டும்.

கோப்புகளின் வர்ணத் தொடரொழுங்கு முறையே : வெள்ளை, ரோஸ், மஞ்சள், சிவப்பு, பச்சை, செம்மஞ்சள், நீலம், ஊதா, கறுப்பு, சாம்பல்